**Publication: Dinamani** **Date: Wednesday,07th October, 2015**

**Edition: Chennai**

# இந்தியா ஃபர்ஸ்ட் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் ரூ. 150 கோடி கூடுதல் மூலதனம்



ஆர்.எம். விசாகா

**புது தில்லி, அக். 6:** இந்தியா ஃபர்ஸ்ட் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் கூடுதல் மூலதனமாக ரூ. 150 கோடி பெற்றுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்தது.

அந்த நிறுவனத்தில், பொதுத் துறையைச் சேர்ந்த பரோடா வங்கிக்கு 44 சதவீதம், ஆந்திர வங்கிக்கு 30 சதவீதம், பிரிட்டனின் லீகல் அண்ட் ஜெனரல் நிதி நிறுவனத்துக்கு 26 சதவீதம் பங்கு உள்ளது.

இந்தியா ஃபர்ஸ்ட் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் தலைமைச் செயல் அதிகாரியுமான ஆர்.எம். விசாகா செவ்வாய்க்கிழமை தெரிவித்ததாவது:

நிறுவன மேம்பாட்டுக்கும், வணிக வளர்ச்சிக்கும் உதவும் வகையில் இந்தியா ஃபர்ஸ்ட் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் கூடுதல் மூலதனம் திரட்டியுள்ளது. தற்போது செலுத்தப்பட்டுள்ள ரூ. 150 கோடியுடன், நிறுவனத்தின் மொத்த பங்கு மூலதனம் ரூ. 625 கோடியாக அதிகரித்துள்ளது.

தொழில்நுட்ப மேம்பாட்டின் மூலமாக நிறுவனத்தின் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்யும் திட்டங்களை வகுத்து வருகிறோம். ஜூன் மாதம் முடிவுற்ற முதல் காலாண்டு நிலவரப்படி, இந்தியா ஃபர்ஸ்ட் ஆயுள் காப்பீட்டு நிறுவனம் நிர்வகித்து வந்த சொத்து மதிப்பு ரூ. 8,160 கோடியாகும்.

நாடு முழுவதும் பெருநகரங்கள், சிற்றூர்கள் எனப் பரவலாக ஆயிரம் கிளைகள் செயல்பட்டு வருகின்றன. பல்வேறு வங்கிகளுடன் இணைந்து, அந்த வங்கிகளின் 10,040 கிளைகள் மூலமாகவும் வாடிக்கையாளர்களுக்கு ஆயுள் காப்பீட்டு சேவைத் திட்டங்களை வழங்கி வருகிறோம். ஏப்ரல்-ஜூன் முதல் காலாண்டு இறுதி நிலவரப்படி, நிறுவனத்துக்கு 95 லட்சம் வாடிக்கையாளர்கள் உள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

A Joint Venture of Bank of Baroda Legal & General Andhra Bank